ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒவ்வொரு தினத்திலும் இரவும் பகலுமாக ஒவ்வொரு இந்திரியங்களாலும் தெரிந்தும் தெரியாமலும் பலவகைப்பட்ட பாபங்கள் நேர்ந்துவிடுகின்றனவென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். அவைகளும் வேதத்திலுள்ள விதி—விலக்குகளுக்குக் கட்டுப்பட்ட மானிடர்களையே சார்கின்றன. பசு முதலியவைகளுக்கு விதியாவது விலங்காவது வேதாதிகளில் காணப்படவில்லை ஆனால் அவைகள் முன் தமக்குக்கிடைத்திருந்த மானிடப்பிறவிகளில் செய்து குவித்த ஸஞ்சிதமாக்கப்பட்ட கர்மங்கள் ஒவ்வொன்றாகப் பயனையளிக்கப் பிராரப்தங்களாகும்பொழுது அந்தக்கர்மங்களின் பயனை அந்தந்தப் பிறவிகளுக்குத் தக்கபடி அனுபவிக்கின்றன. இவ்விதமாக அனுபவிக்கப்படும் பிறவிக்கடலைத் தாண்டுவதற்காகவே புண்ணியவசத்தால் புனிதமான மானிடஜன்மம் பரமேசுவரனால் அளிக்கப்படுகின்றது. அதில் கொஞ்சமேனும் பாபஸம்பந்தம் நேரிடாவிட்டால் புண்ணியாதிசயத்தால் பாப மூட்டைகளையொழித்து தத்துவ ஞானக்னியால் ஆகாமி—ஸஞ்சிதம்ஆகிய கர்மமூட்டையை யெரித்துப் பரமபுருஷார்த்தத்தை அடைந்துவிடலாம். ஸம்ஸாரத்தில் பட்டுழலும் பிராணிகளுக்கு அல்லும்பகலும் அறிந்தும் அறியாமலும்தான் பாபமூட்டை குவிந்துவிடுகின்றதே. அந்தோ! பரிதாபம்!! என்னசெய்வான் இந்த ஜீவன்? என்ற கருணையால் காலை-நடுப்பகல்-மாலை ஆகியவேளைகளில் அந்தந்த வேளையில் நேர்ந்த பாபங்களைத் தொலைப்பதற்காகவே வேளைதோறும் ஸந்தியாவந்தனாதி கர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வேளையிலும் முக்கால்மணி நேரத்திற்குள்ளாகவே செய்துமுடிக்கக்கூடிய அந்தக்கார்யங்களை பிராணிகள் செய்வதில்லை. இப்படித் தன் கார்யத்தில் மோசம்போகிறவன் ஊர் கார்யத்திற்காகப் பாடுபடுகின்றானும். மதாசாரமென்பது மானிடர்களைக்கெடுக்கவந்த மஹாமோசமான கட்டுப்பாடெனச்சொல்லிச் சிறுவர்களைக் கலைக்கின்றார்கள் கர்மகதியைக்கண்டுபிடிப்பது கடினத்திலும்கடினம். கர்மவலையில் சிக்கிக்கொண்டவர்கள் அதை விட்டுவிலகக் கடவுளைச் சரணமடைந்து அவன் விதித்துள்ளபடி கர்மயோகத்தில் கட்டுப்பட்டு நடப்பதைத்தவிற வேறு வழியில்லை. இப்படிப்பேசும் பிராமாணிகர்களின் பிரமாணபூர்வகமான பேச்சைப் புறக்கணித்து அப்பெரியாரிடம் படாப்பழிசுமத்திப் பேசினாலும் அப்பெரியார் பாபமூட்டையையே சேர்த்துப் புனிதமான பிறவியைப் பாழாக்கிவிடாதீர்களென்று பிராணிகள் மீது பரமகருணையால் புண்ணியமார்க்கத்தைக் காண்பிவிப்பார்களேயன்றி போலிகளைப்போல் பயங்கரமான பாபவழியைக் காட்டமாட்டார்கள். அப்பெரியார்சொற்படி அனைவரும் நடந்து ஆனந்தமடைவீராக, சுபம், பத்திராதிபர்,

# ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-ஸு ஆடி-மீ ௨௯௳

## பவித்திரமானது— காயத்திரிஜபம்.

தினந்தோறும் ஒவ்வொரு வேளையிலும் நேர்ந்த பாபங்களை அந்தந்த வேளையிற் செய்யப்படும் ஸந்திவாவந்தனாதிகளால் போக்கிவிட்டு எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தபோதிலும் "सुनिपु-णानामपि सूक्ष्मापराधदर्शनात्" பாபத்தை அணுகவொட்டாமற் செய்ய மிகுந்த ஸாமர்த்தியம் வாய்ந்தவர்களுக்கும் எப்படியோ ஸூக்ஷ்மமான அபராதங்கள் நேர்ந்துவிடும் என்று பெரியோர்கள் உபதேசித்தபடி பாபங்கள் எப்படியோ ஒரு வருஷத்தில் பார்த்தால் குவிந்துவிடும். அன்றியும் உபாகர்மகாலத்தில் வேதாத்தியயனம் செய்ய ஆரம்பித்து நியமத்தோடு ஒருமாஸம் இரவின் முற்பகுதியில் அத்தியயனம் செய்யாமலும் மற்றுமுள்ள அனத்தியயனகாலங்களில் அத்தியயனம் செய்யாமலும் அத்தியயனத்திற்குரிய நாட்களிலேயே நாலரை மாதமோ ஐந்துமாதமோ அல்லது தக்ஷிணாயனம் பூராவுமோ குருகுலத்தில் வேதாத்தியயனம் செய்யும்படிக்கும் உடனே உத்ஸர்ஜனம் செய்யும்படிக்கும் சாஸ்திரம் விதிக்கின்றது, இவ்வளவு நியமத்திற்கும் கட்டுப்பட்டிருந்த நம் முன்னோர்களுக்கே நியமக்குறைவு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அப்படியிருக்கையில் தற்காலத்தியவர்களிடம் கேட்கவே வேண்டியதில்லை. பெரும்பாலோர் தற்காலத்தில் உபாகர்மதினத்தில் அத்தியயனாரம்பம் முடிந்து வியாஸப்ரஸாதமாகக் கொடுக்கப்படுவதைப் பெறத் தயாராக வந்துவிடுகிறார்கள். வேறு சிலர் குடும்பத்தில் நேர்ந்த சில குறையைக் காரணமாகக் கொண்டு கிரஹத்திலேயே புதுப்பூணலையாத்திரம் போட்டுக் கொள்ளுகிறார்கள். அதுமுதல் அத்தியயனம் செய்பவர்களும் கண்டிப்பாய் நியமத்தோடிருக்கவில்லை என்பதைத்தெரியாததைப் போல் புதிதாகச் சொல்லவேண்டாம். ஆகவே விதி தவறித்தான் அத்யயனம் செய்யப்படுவதாக ஆகிறது. முன்சொன்ன ஒரு

வருஷத்தில் நேர்ந்த தோஷங்கள் விலகுவதற்கும் அத்யயனத்தில் விதிதவறியதாலேற்பட்ட தோஷம் விலகுவதற்கும் சிராவண மாஸ கிருஷ்ணப்ரதமையில் மஹாப்ராயச்சித்தமாக காயத்ரிஜபம் விதிக்கப்பட்டிருக்கிறது. சிராவணபௌர்ணமியில் எள்ளைமாத்திரம் சாப்பிட்டு உபவாஸமிருந்து மறுநாள் நித்தியமான ஸ்னான ஸந்தியாவந்தன(பிரும்மசாரியனால்)ஸமிதாதான (கிருஹஸ்தனாகில்) ஔபாஸனம் முதலிய பிராதக்கால கார்யம் முடிந்தவுடன் ஸமுத்திரத்திற் போய்ச்சேரும் மஹாநதிதீர்த்தத்தில் ஸ்னானம் செய்து சுத்தமான வெள்ளைவஸ்திரந்தரித்து குலாசாரப்படிபுண்ட்ரமிட்டுக்கொண்டு ஆஸனவிதிப்படி ஆஸனத்தின்மீதிருந்து கையில் பவித்திரமணிந்து ஸங்கற்பித்துக்கொண்டு காயத்திரி மந்திரத்தால் 1008-ஸமித்துக்களை ஹோமம் செய்யவேண்டும். இதுதான் முக்கிய பக்ஷம். இது சிரத்தையிருந்தால் அநுஷ்டிக்கக்கூடியதே. வேறு சிலவோ சிரமமோ ஒன்றும் கிடையாது. அப்படி ஹோமம் செய்யமுடியாவிடில் 1008-ஆவர்த்தி காயத்திரிஜபத்தையாவது செய்யவேண்டும். இதை ஸங்கவகாலத்தில் செய்யவேண்டும். பிராயச்சித்தகர்மங்களையெல்லாம் ஸங்கவகாலத்தில் செய்யவேண்டுமென்று பொதுவிதி. ஸங்கவகாலமென்பது ஐந்துபாகமாகப் பிரிக்கப்பட்ட பகல்காலத்தில் இரண்டாவது பாகமாம். இந்த மஹாப் பிராயச்சித்தரூபமான இந்தக் கார்யம் வருஷத்தில் ஒரு நாளில் மூன்றேமணி நேரத்திற்குள் செய்யவேண்டியது. ஒரு வருஷத்தில் நேர்ந்த தோஷங்களையெல்லாம் விலக்கக்கூடியது. அத்தியயனத்தில் நியமக்குறைவாலோ தவறுதலாலோ ஸம்பவித்த தோஷங்களையெல்லாம் போக்கக்கூடியது. ஊர்க்கார்யத்திற்காக உழைக்கிறேனென்றும் எல்லாவற்றையும்விட அதுவே சிறந்ததென்றும் யாரோ ஒருவர் தன் அபிப்பிராயமாகச் சொல்லியிருப்பதை பெரிய உபதேசமாகக்கொண்டு கன்னியாகுமரிமுதல் இமயமலைவரை ஒரேவிதமாகப் பிரமாணமெனக் கொண்டாடப்பட்டுவந்ததும் அந்தப் புண்யபூமியான பாரதநாட்டில் அந்தணர் மணிகள் அந்தக்கரணத்துடன் தொன்றுதொட்டநாளாய் அநுஷ்டித்துவந்ததுமான இப்பெரிய கார்யத்தை அலக்ஷியமாக விட்டுவிடாமல் சிரத்தையுடன் எல்லோரும் அநுஷ்டித்து பாபம் விலகப் புண்ணியாத்துமாக்களாகிப் பரமபுருஷார்த்தம் பெறுவாராக.

---

பத்திராதிபர்.

# அத்வைதமதமே வைதிகம்.

(621-வது பக்கத்தொடர்ச்சி)

மேலும் பிறகு காமத்தைச் சொன்னால் அது மோக்ஷத்திற்கு மேலாகாதபடியால் அது பாதிதமாயும் முடியும். காமம் மோக்ஷம் என்னும் க்ரமத்தில் இவ்விதம் இருவிததோஷமும் வருகிறதில்லை ஏனெனில் காமம் என்று கூறியபிறகு அது நச்வரமாக அனங்வா மாய்த் தனக்குமேல் ஒரு புருஷார்த்தத்தை உடையதாதலால் அதற்குமேல் ஒரு புருஷார்த்தமுண்டோ என்று ஆகாங்க்ஷை ஏற்பட்டு அத்துடன் பரிஸமாப்திஏற்படாததால் பிறகு ஒன்றைச் சொல்வது ஆகாங்க்ஷிதாபிதானமாய் முடியும். காமத்தைவிட மோக்ஷம் மேல் புருஷார்த்தமானதால் அதைப் பிறகு சொல்வது அபாதிதமாயும் முடியும். மேலும் இப்புருஷார்த்தக் கிரமமானது

उत्तरोत्तरमुत्कर्षो वस्तुनस्सार उच्यते ।

'கூறப்படும் வஸ்துவிற்கு மேன்மேல் உத்கர்ஷமானது ஸாரமெனப் படும். என்று கூறிய லக்ஷணமுடையதும்

जये धरित्र्याः पुरमेव सारं पुरे गृहं सद्मनि चैकदेशः ।
तत्रापि शय्या शयने वरस्त्री रत्नोज्वलो राज्यसुखस्य सारम् ॥

"ஓர் அரசன் பூமியை ஜயித்தால் அதில் அவனுக்கு ஸாரமா யுள்ளது பட்டணமே. பட்டணத்திலும் அரண்மனையே ஸாரம். அரண்மனையில் அந்தப்புரமாகிய ஏகதேசமே ஸாரம். அதிலும் ஹம்ஸதூலிகாமஞ்சமாகிய சயனமே ஸாரம். அதிலும் உயர்ந்த ரத்னாபரணங்களால் பிரகாசிப்பவளும் அழகு வாய்ந்தவளுமான உயர்ந்த ஸ்திரீயே ராஜ்ய ஸுகத்திற்கு ஸாரம்." என்று பிருஹத் ஸம்ஹிதையில் ஸ்திரீப்பிரசம்ஸை என்னும் அத்யாயத்தில் வாராஹமிஹிராசார்யரால் கூறப்பட்ட சுலோகத்தைக்கூறி ராஜா னகருய்யகரால் அலங்காரஸர்வஸ்வமென்னும்கிரந்தத்தில் லக்ஷண ஸமன்வயம் செய்யப்பட்டதுமான ஸாராலங்காரம் பொருந்தியது, காரணம் கார்யம் இரண்டுக்குள் கார்யத்திற்காகக் காரணமே யன்றி காரணத்திற்காகக் கார்யமில்லை. ஆகையால் கார்யம் உத் தேச்யமானபடியால் பிரதானம். அதற்காகக் காரணமானபடி

யால் அதை அபேக்ஷித்துக் காரணம் அப்பிரதானம் என்பது உலகப்பிரஸித்தம். ஆதலால் அர்த்தம் முதலிய எல்லாவற்றிற்கும் காரணமாய் அப்பிரதானமாயுள்ள தர்மம் முதலிலும் அதன் கார்யமாய் அதைவிடப் பிரதானமாயுள்ள அர்த்தம் அதன் பிறகும் அதற்குக் கார்யமாய் அதையும்விடப் பிரதானமாயுள்ள காமம் அதன்பிறகும் எல்லாவற்றையும்விட மேலானதாய் எல்லாவற்றையும்விடப் பிரதானமாயுள்ள மோக்ஷம் அவற்றிற்கெல்லாம் பிறகும் கூறப்பட்டு ஸாராலங்காரத்தின் லக்ஷணஸமன்வயம் பொருந்தியதாயுள்ளது இந்தப் புருஷார்த்தக் கிரமம். இதில் மோக்ஷம் காமம் என்று கிரமம் கூறினால் ஸாராலங்காரம் எப்படிப் பொருந்தும். மேலும் தர்மம், அர்த்தம், மோக்ஷம், காமம் என்று கிரமம் கூறினால்

पतत्प्रकर्षं तत्प्राहुः प्रकर्षो यत्र विश्लथः ॥

"எந்த விடத்தில் உத்கர்ஷமானது ஒழுங்காக மேன்மேல் போகாமல் பங்கத்தை அடைகின்றதோ அந்த விடத்தில் பதத்பிரகர்ஷம் என்னும் தோஷத்தை ஆலங்காரிகர்கள் கூறுகின்றனர்" என்று அலங்கார கிரந்தங்களில் கூறியபடி யானை, புலி, ஸிம்மம், பூனை என்கிற விடத்தில்போல பதத்பிரகர்ஷம் என்னும் தோஷமும்வரும். ஆகையால் காமம் மோக்ஷம் என்று கூறுவதே பொருத்தமுடையது. அவ்விதமே அர்த்தம் தர்மத்தின் கார்யமாய் தர்மத்தைவிடப் பிரதானமாவதால் அர்த்தம் தர்மம் என்று கூறாமல் தர்மம் அர்த்தம் என்று கூறுவதும் பொருத்தமே. இவ்விடத்தில் ஓர் ஸந்தேஹம் உண்டாகின்றது. அதாவது தர்மம் அர்த்தத்திற்குக் காரணமாவதுபோல் அர்த்தமும் தர்மத்திற்குக் காரணமாகின்றது, அர்த்தமில்லாமல்போனால் ஜ்யோதிஷ்டோமம் முதலிய இஷ்டமென்னும் தர்மமும் குளம் வெட்டுவது முதலிய பூர்த்தமென்னும் தர்மமும் ஆகிய தர்மங்களெல்லாம் எப்படிச் செய்யமுடியும். ஆகையால் தர்மத்திற்கு அர்த்தம்காரணமாயிருக்கிறது. அதுபோலவே அர்த்தத்திற்கும் தர்மம் காரணம் தான் தர்மம் செய்யாதவனுக்கு கிருஹாராம க்ஷேத்ரவித்த புத்ரமித்ர களத்ராதி ரூபமான ஸம்பத்தாகிய அர்த்தம் எப்படிக் கிடைக்கும். அர்த்தம் புண்யத்தின் பயன் என்பது

पूर्वपुण्यविभवव्ययलब्धास्संपदः ॥

"ஸம்பத்துக்கள் பூர்வஜன்மாவில்செய்த புண்யகர்மமாகிய விபவத்தைச் செலவழித்து அதனுல் கிடைத்ததுகள்" என்று ஸ்ரீ ஹர்ஷமிச்ரரும் நைஷதமென்னும் வித்வதௌஷமாகிய காவ்யத்தில் கூறியிருக்கின்றார்

यद्द्वारे मत्तमातङ्गा वायुवेगास्तुरङ्गमाः ।
पूर्णेन्दुवदना नार्यश्शिवपूजाविधेः फलम् ॥

"எவனது கிருஹத்தின் துவாரத்தில் மதயானைகளும் வாயுவேகமுள்ள ஜாத்யச்வங்களும் இருக்கின்றனவோ பூர்ணசந்திரனுக்கொப்பான முகத்தோடு கூடிய ஸுந்தரிகளான நாரிகள் எவனது கிருஹத்தில் வஸிக்கிறார்களோ அந்த விபவங்களெல்லாம் அவனது பூர்வஜன்மாவில் செய்யப்பட்ட சிவபூஜாவிதியின்பயன்கள்" என்று புராணங்களும் கூறுகின்றன. ஆகையால் அர்த்தத்திற்கும் தர்மம் காரணமாகின்றது. இவ்விதம் தர்மம் அர்த்தம் இரண்டும் ஒன்றுக்கொன்று காரணமாயிருக்கின்றது. இக்கருத்தையே

अर्थेनोपार्ज्यते धर्मो धर्मेणार्थउपार्ज्यते ।
अन्योन्याश्रयणं ह्येतदुभयोत्पत्तिसाधनम् ॥

"அர்த்தத்தால் தர்மம் ஸம்பாதிக்கப்படுகின்றது. தர்மத்தால் அர்த்தம் ஸம்பாதிக்கப்படுகின்றது. இவ்விதம் ஒன்றையொன்று மாறிமாறியாசிரயித்தல் இரண்டுமுண்டாவதற்குக் காரணமாகின்றது." என்னும் சுலோகத்தால் நீலகண்ட தீக்ஷிதரும் விளக்கியிருக்கின்றார். இவ்விதமே

अर्थोऽप्यर्थे नचेत् साध्यः का वार्ता धर्मकामयोः ।
अर्थस्सर्वजगन्मूलमनर्थोऽर्थविपर्ययः ॥

"பணமும் பணத்தாலேயே ஸம்பாதிக்கவேண்டியிருப்பதால் அர்த்தத்திற்கே அர்த்தம் காரணமானல் தர்மம் காமம் இரண்டுக்கும் அர்த்தம் காரணமென்று சொல்லவேண்டுமா? ஆகையால் அர்த்தமே ஸர்வஜகத்திற்கும் காரணம் அர்த்தமில்லாமலிருப்பது அனர்த்தமே" என்றும்

कर्मज्ञानञ्च मोक्षाय कर्मण्यर्थोऽधिकारिता ।
अतोऽर्थेनैव कैवल्यं न कैवल्येन लभ्यते ॥

"கர்மம் சித்தத்தில் ஜ்ஞானோத்பத்தி யோக்யதையை உண்டு பண்ணி ஜ்ஞானத்தின் துவாரமாகவும் பிறகு ஜ்ஞானம் உண்டாகி அது நேரிலும் மோக்ஷத்திற்குக் காரணமாகின்றது. இவ்விதம் மோக்ஷத்திற்கு அடிப்படையான காரணமாகிய கர்மத்தில் அதிகாரமோ அர்த்தத்தால் ஏற்படுகின்றது. ஏனெனில் அர்த்தமில்லாமல் கர்மாநடைபெறாததால் இவ்விடத்தில்

अर्थीसमर्थो विद्वान् अपर्युदस्तोयजेत ।

"யாகத்தாலுண்டாகிய பலத்தில் அபிலாஷையுடையவனும் யாகம் செய்யும்படியாய் சரீரம் இந்திரியம் முதலியதின் பாடவமுடையனும் யாகம் அதன் அங்கங்கள் முதலியதின் ஸ்வரூபத்தை நன்கு அறிந்தவனும் சாஸ்திரத்தால் இவன் யாகத்தைச் செய்யக்கூடாதென்று விலக்கப்படாதவனுமான அதிகாரி யாகத்தைச் செய்ய வேண்டும்" என்று சாஸ்திரங்களில் யாகம் முதலிய கர்மங்களின் அதிகாரியை நிரூபிக்கும் வாக்யத்தில் 'அர்த்தி' என்னும் பதம் கர்மபலத்தை ஆசைப்படுகிறவன் என்கிற பொருளை வைத்துப் போடப்பட்டிருந்தாலும் பணமுடையவன் என்றும் பொருள் தருகிறபடியால் கர்மாவில் அர்த்தியாயிருந்தால்தான் அதிகாரம் என்று சிலேஷையால் அர்த்தமும் கர்மாதிகாரத்திற்குக் காரணமென்று பொருள்கொண்டு **कर्मण्यर्थोऽधिकारिता** என்று சொன்னதாகவும் அபிப்ராயம் சொல்லலாம். ஆகையால் தர்ம காமங்களைப்போல் கைவல்யமாகிய மோக்ஷமும் பரம்பரையாய் அர்த்தத்தால்தான் ஏற்படுகின்றது. அவ்வித மோக்ஷமானது கைவல்யத்தால் பணமில்லாமல் கேவலமாய் அதாவது தரித்ரனாய் இருப்பதால் கிடைக்காது என்றும் தர்மம் காமம் மோக்ஷம் எனனும் மூன்று புருஷார்த்தங்களுக்குமே அர்த்தம் காரணமென்று நீலகண்ட தீக்ஷிதர் கூறியிருக்கின்றார். ஆகையால் அர்த்தத்திற்குக் காரணம் தர்மமென்பதால் தர்மம் முந்தியும் அர்த்தம் பிந்தியும் கூறப்பட்டது என்பது பொருந்தாது. விநிகமனையில்லாததால் தர்மத்திற்குக் காரணம் அர்த்தம் என்பதைவைத்து அர்த்தம் முந்தியும் தர்மம் பிந்தியும் கூறப்படுவதும் பொருந்துமாதலால் ஆகையால் அர்த்தம் தர்மமென்று சொல்லாமல் தர்மம் அர்த்தம் என்று சொன்னதற்குத்தகுந்த காரணமென்னவென்று ஸந்தேகம்.

இதற்கு இது ஸமாதானம். தர்மம் அர்த்தம் இரண்டும் ஒன்றுக்கொன்று காரணமாயிருக்கிறதென்பது வாஸ்தவம்.

ஆனாலும் அதில் விசேஷமுண்டு. அதாவது பூர்வஜன்ம ஸுக்ருதம் இல்லாமல் அர்த்தம் உண்டாகாததால் அர்த்தமெல்லாம் தர்மத்தாலுண்டாவதாயிருந்தாலும் பணமில்லாமலும் சில தர்மம் நடக்குமானதால் தர்மமெல்லாம் அர்த்தத்தாலுண்டாகிறது என்பது இல்லை. அர்த்தமில்லாமல் ஏழையாயிருந்தாலும் அவனுக்கும் ஸாத்யமாகிய தர்மங்களுண்டு. அதனாலேயே

धनवन्तमदातारं दरिद्रमतपस्विनम् ।
कण्ठे सम्यक्शिलां बध्वा सिन्धुमध्ये विनिक्षिपेत् ॥

"தனவானாயிருந்து தானம் செய்யாதவனையும் தரித்திரனாயிருந்து கிருச்ரம் சாந்திராயணம் முதலிய தபஸ்ஸைச் செய்யாதவனையும் கழுத்தில் அவிழ்ந்துபோகாமலிருக்கும்படி நன்றாகச் சுறுக்கிட்டு ஸமுத்திர மத்தியில்போடவேண்டும்" என்று ஸ்மிருதிகளில் தனமுள்ளவனுக்கு தனசாதயமான தர்மத்தையும் தனமில்லாதவனுக்குச் சரீர திரமத்தால் ஸாத்யமாப் தனத்தை அபேக்ஷிக்காத தர்மத்தையும் விதித்திருக்கிறார்கள்.

நீலகண்ட தீக்ஷிதர்களும்

अर्था न स्युर्यदि विजहिमो धर्ममर्थैकसाद्ध्यं
कायक्लेशैः कतिकतिविधस्साधनीयो न धर्मः ।
कायश्श्रान्तो यदि भवति कस्तावता धर्मलोप
च्छित्तम् दत्वा सकृदपिशिवे चिन्तितं साधयामः ॥

"நம்மிடத்தில் அர்த்தமில்லாமல்போனால் அர்த்தத்தால் மாத்திரம் ஸாதிக்கக்கூடியதான யாகம்கூபதடாகாராமாதி நிர்மாணம் தானம் என்னும் இஷ்டம் பூர்த்தம் தத்தம் ஆகிய தர்மத்தை நாம் விட்டுவிடுவோம். பணமில்லாமல் போனாலும் சரீர கிலேசங்களால் ஸாதிக்கக்கூடிய தர்மங்கள் எவ்வளவில்லை. சரீரமும் சிரத்தை அடைந்து சரீர சிரமத்தாலாகக்கூடிய கிருச்ரம் சாந்திராயணம் முதலிய கர்மங்களைச்செய்ய முடியாமல்போனாலும் அப்பொழுதும் நமக்கு தர்மம்செய்ய முடியாமல் தர்மலோபம்வருவது கிடையாது ஏனெனில் மனதை ஒருதடவையாவது ஒரு க்ஷணமாவது சிவனிடத்தில் அர்ப்பணம் செய்து அபீஷ்டமாகிய பலத்தை அதனால் நாம் ஸாதிப்போம். அவ்வித சிவத்யானமாகிய மானஸிக

தர்மம் காயிகவாசிக தர்மங்களைவிடச் சிறந்ததல்லவா? அவ்விதச் சிறந்த மானஸிகமான தியானத்தினுலேயே

शिवनामनि भाविते ऽन्तरङ्गे महति ज्योतिषि मानिनीमयार्धे ।
दुरितान्यपयान्ति दूरदूरे मुहुरायान்ति महान्ति मङ्गलानि ॥

'ஸ்திரீ ரூபமான அர்த்தபாகத்தையுடைய சிவன் என்னும் பெயருடைய உயர்ந்த ஜ்யோதிஸ்ஸானது அந்தரங்கமாகிய மனதில் தியானிக்கப்பட்ட மாத்திரத்தில் ஸகலமான பாவங்களும் வெகுதூரத்தில் போய்விடுகின்றன. பெரிதான மங்களங்களெல்லாம் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன'' என்றும்

स्मृते सकलकल्याणभाजनं यत्र जायते ।
पुरुषस्तमजं नित्यं व्रजामि शरणं हरिम् ॥

''யாதொரு ஹரியை ஸ்மரித்தமாத்திரத்தில் ஸ்மரித்த புருஷன் ஸகலமான கல்யாணங்களுக்கும் பாஜனமாக அதாவது இருப்பிடமாக ஆகின்றானே. அப்பேற்பட்ட ஜனனமரணமில்லாத ஹரியைச் சரணமடைகின்றேன்'' என்றும் கூறியபடி ஸமஸ்தமான அபீஷ்டங்களையும் நாம் அடைந்துவிடுவோம் என்று கூறியிருக்கின்றார்கள். ஆகையால் அர்த்தம் தர்மமெல்லாவற்றிற்கும் காரணமாகாதபடியால் அர்த்தம் தர்மம் என்று கூறாமல் தர்மம் அர்த்தம் எல்லாவற்றிற்கும் காரணமானபடியால் காரணம் கார்யத்திற்குச் சேஷமானதைவைத்து தர்மம் அர்த்தம் என்று கூறுவது பொருத்தமுடையதே.

(தொடரும்) போலகம், ஸ்ரீராமசாஸ்திரிகள்.

## கர்மாவும் அதன் எல்லையும்.

உலகத்தில் மனுஷ்யர்கள் சுகத்தை அனுபவிக்கும்போதும் சிரமத்தை அனுபவிக்கும்போதும் அதை பூர்வஜன்மகர்மபலமென்று சொல்லுகிறார்கள். வாஸ்தவமே. இவ்விதம் அனுபவிக்கும்படியான சுகமோ துக்கமோ அவ்விதமிருந்தால் இந்த ஜன்மத்தில் செய்யும்படியான கர்மாக்களுக்கும் பூர்வஜன்மத்தில் செய்யப்பட்ட கர்மாக்களுக்கும் எவ்விதமான சம்பந்தமாவது உண்டா. அவ்விதம் சம்பந்தம் பூறுவாக உண்டென்றால்

இந்த ஜன்மத்தில் செய்யும் கர்மாக்கள் பூர்வ ஜன்மகர்மாவைப் பொருத்திருக்கிறதென்றால் இந்தக் கர்மாக்களுக்கு பிந்தி பலன் ஏற்படுவது அசம்பாவிதமாக இருக்கும். இப்படிப்பட்ட விஷயங்களைக் கவனிக்குங்கால் இந்த ஜன்மாவில் அனுபவிக்கப்படும் சகல சுக துக்கங்களும் பூர்வஜன்ம கர்ம பலமென்றும் இப்போது செய்யும் படியான கர்மாக்கள் எல்லாம் நமது புத்தியாலும் விவேகத்தாலும் செய்யப்படுவதாகவும் ஒப்புக்கொள்வது யுக்திக்கு அனுகுணமானதாக இருக்கிறது. இந்த ஜன்மாவில் சுகத்தை அனுபவிப்பதால் பூர்வ ஜன்மாவில் சத்கர்மாவை செய்திருக்கவேண்டுமென்று நாம் நினைக்கும்படியான ஒருவன் இந்த ஜன்மாவில் துஷ்கர்மாவை செய்வதைக் காண்கிறோம். அதேவிதமாக இந்த ஜன்மாவில் துக்கத்தை அனுபவிப்பதால் பூர்வஜன்மாவில் துஷ்கர்மாவைச் செய்திருக்கவேண்டுமென்று நாம்நினைக்கும் ஒருவன் இந்த ஜன்மாவில் சத்கர்மாவைச் செய்வதைக் காண்கிறோம். இந்த விரோதத்தைப் பார்க்க பூர்வஜன்ம கர்மாவிற்கும் இந்த ஜன்மாவில் செய்யும் கர்மாவிற்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லையென்று தோற்றுகிறது. இது நிற்க சிலவிஷயங்களை கவனிக்குங்கால் அவைகளை பிரவிருத்தியான கர்மாஜாப்தாவில் சேர்ப்பதா அல்லது பூர்வகர்ம பலனான அனுபவ ஜாப்தாவில் சேர்ப்பதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. உதாஹரணமாக;—ஒருவர் ஸோமயாகம்செய்யத் தீர்மானிக்கிறார், அந்த ஸமயம் தகப்பனார் ஜீவந்தராக இருக்க அவர் யாகம்செய்யாமல் புத்திரன் யாகம் செய்யக்கூடாதென்று சாஸ்திரம் இருப்பதாகத் தெரியவருகிறது. அதற்காக அந்த புத்திரன் ஸ்வயமாகவும் புத்தி பூர்வமாகவும் செய்யக்கூடாமலிருக்கும் தகப்பனை யாகம் செய்யும்படிசெய்து பின்தான் யாகம் செய்கிறார். இதில் தகப்பன் செய்யும் யாகம் பூர்வஜன்ம கர்மபலனா அல்லது அந்த கர்மாவுக்குப்பிந்தி பலனுண்டா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களை யோசிக்க வரையறுத்து இவவிதமான அடையாளங்களைக்கொண்டு இன்னென்ன விதமான கர்மாவென்று தீர்மானம் செய்யமுடியும் என்று எவ்விதம் சொல்லுவது. இது விஷயமாக பண்டிதர்கள் கொஞ்சம் விசாரம் செய்வார்களென்று நம்பி இந்த விஷயங்களை இந்த பத்திரிகை மூலயம் தெரிவிக்கலானேன்.

D. ஸாம்பசிவய்யர், B. A., B. L.

# காயத்ரீ ஜபத்தில்மற்றோர் சந்தேஹம்.

இஷ்டிகாலம்தான் காயத்ரீ ஜபத்திற்கும் காலமென்றுதெரிகிறது. அப்படியானால் பிரம்மஸ்ரீ T. S. விசுவநாத சிரௌதிகள் அவர்களால் கெணிக்கபபட்டதும், ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதானத்திலிருந்தும்சாஸ்திரீயமென்று அங்கீகரிக்கபட்டதுமானதிருக்கணித பஞ்சாங்கத்தில் நாளது ஆவணிமீ 12உ வெள்ளியன்று இஷ்டியும் 13உ சனிக்கிழமையன்று காயத்ரீஜபமும் போடப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் பஞசாங்கத்தில் 12உ வெள்ளியன்று இஷ்டியும், காயத்ரீ ஜபமும் போடப்பட்டிருக்கிறது. இதில் யுக்தாயுக்தத்தை விசாரித்து அனுஷ்டானம் பண்ணவேண்டிய காலத்தையும், அதன் பிரமாணத்தையும், தயவுசெய்து எழுதியனுப்பினால் நாங்கள் ரொம்பவும் உத்கிருதராக விருப்போம்.

ஸோமசுந்தர சாஸ்திரிகள்,
N. P. நாராயண தீக்ஷிதர் கார்டன் ஹௌஸ்,
நூராணி, பாலக்காடு.

---

## ॥ श्रीमन्नटेशस्तवः ॥

## நடேசஸ்துதி.

गणनाथं कुमारं च शारदांगिरिजां मुहुः ।
प्रणम्यललितस्तोत्रं करोमि नटतुष्टये ॥

கணபதியையும், ஷண்முகனையும், ஸரஸ்வதியையும், பார்வதியையும் பலதடவை நமஸ்கரித்து நடேசனுடைய திருப்தியின் பொருட்டு சுந்தரமான ஸ்தோத்திரத்தைச் செய்கிறேன்.

वेदैकगम्य मखिलामरवन्द्यमानमानन्ददांघ्रि सरसीरुहमाप्तकामम् ।
आपन्नभक्तपरिरक्षणजागरूकं भक्त्यानमामि नटराजमहं सभेशम् ॥

வேதங்களால் மாத்திரமறியத்தகுந்தவராயும், சமஸ்த தேவர்களால் பூஜிக்கப்படுகிறவராயும் ஆனந்தத்தைத் தருகிற சரணாவிந்தத்தை உடையவராயும், ஸகல இஷ்டங்களையுமடைந்தவராயும் தம்மை உபாஸித்த பக்தர்களைக் காப்பாற்றுகிறவராயும், சித்ஸபைக்கு நாயகனாயுமுள்ள ஸ்ரீமந் நடராஜனை பக்தியால் நமஸ்கரிக்கிறேன்.

जननि जगति जात: सागसामग्रगण्य:
तवचरणसरोजे देवि भक्त्या प्रपद्ये ।
विकिर मयिकृपार्द्रालोकनं दीनदीने
भुविसुतमपराधात्किन्नुमाता जहाति ॥

ஓ அம்மையே! உலகத்தில் சுருதிஸ்மிருகிரூபங்களான உன்னுடைய ஆஜ்ஞையை உசிதப்படி அனுஷ்டியாததால் பெருங் குற்றவாளியாக ஆகிவிட்டேன். உன்னுடைய பாதாரவிந்தங்களை பக்தியால் நமஸ்கரிக்கிறேன். மூடசிகாமணியான என்னிடம் கருணா கடாக்ஷத்தை வர்ஷிக்கவேணும். உலகத்தில் பிள்ளையைத் தாய் குற்றத்தினால் தள்ளுவதுண்டா? "அன்னை அருமைப் புதல்வர்களைப் பாதுகாப்பதுபோல் எங்களை ரக்ஷிக்கவேணும்" என்று இந்திரியங்கள் பிராணனைப் பிரார்த்திப்பதாக ப்ரச்னோபநிடதம் கூறுகின்றதன்றோ?

द्राक्षासदृक्षसरळाक्षर दानदक्षैः उक्षेन्द्रवाह नटनेक्षणदीक्षितैर्माम् ।
रक्षत्वदक्षिगतमम्बकृपाकटाक्षैः पद्माक्षि दक्षतनयेमयि पक्षपातात् ।

ஓ அன்னையே! ஓ பார்வதியே! உன் சந்நிதியை அடைந்து உன் பார்வையில் வந்த என்னை திராக்ஷாபாககாவ்ய சாமர்த்தியத்தைத் தருகிறதுகளாயும் பரமசிவனுடைய நடனதர்சனத்தில் சமர்த்தங்களாயுமுள்ள கருணாகடாக்ஷங்களால் விசுவாசத்தால் காப்பாற்று.

यद्भासैव जगद्विभाति निखिलं यच्चित्स्वरूपंस्वतः
प्रज्ञावद्भिरुपास्यतेऽनुदिवसं यत्स्वीयहृत्पत्पङ्कजे ।
यस्याज्ञावशगास्सुरास्स्वविहितं तन्वन्तिभान्वादयः
दिव्यं ज्योतिरुपास्महे तदमलं श्रीचित्सभामध्यगम् ॥

தன்னுடைய காந்தியால் ஸகல ஜகத்துக்களையும் பிரகாசிக்கும்படி செய்கிறதாயும், ஜ்ஞானஸ்வரூபமாயும், மஹர்ஷிகளால் ஹ்ருதய பங்கஜத்தில் எப்பொழுதும் உபாஸிக்கத் தகுந்ததாயும், தன்னுடைய ஆஜ்ஞையால் ஸூர்யன் முதலான ஸகல தேவர்களையும் தங்கள் கார்யங்களை அனுஷ்டிக்கும்படி செய்கிறதாயும் சித்ஸபா மத்தியில் இருப்பதாயுமுள்ள திவ்யஜ்யோதிஸ்ஸையுபாஸிக்கிறோம்

(தொடரும்)

சிதம்பரம் ராஜா ஸோமசேகரதீக்ஷிதர்.

---

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீமஹாஸ்வாமிகளின்

# சாதுர்மாஸ்யவைபவம்.

ஸ்ரீமஹாஸ்வாமிகள் புண்ணியக்ஷேத்ராடனம் செய்துகொண்டும், ஆங்காங்குள்ள சிஷ்ய ஜனங்களுக்கு உபதேசஞ்செய்துகொண்டும், அகிலாண்டேசுவரி அம்மனுக்கு ஸ்ரீசக்கிரவடிவமான தாடங்கப்பிரதிஷ்டை செய்துவிட்டு, ஸ்ரீகாஞ்சீ காமாக்ஷி அம்மனைத் தெரிசித்து, காமாக்ஷி அம்பாளின் ஆலயம் ஜீர்ணமாய் இருப்பது பற்றி அவ்வாலயத்தை ஜீர்ணோத்தாரணம்செய்து புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்யஏற்பாடுசெய்து கொண்டும் விஜயயாத்திரையில் இருக்கும் விஷயம் ஆஸ்திகர்யாவராலும் போற்றபடுகிறதென்பது எல்லோருமறிந்தவிஷயம்.

பிரகிருதத்தில் இவ்வருஷம்ஸ்ரீவியாஸபூஜா மகோத்ஸவத்தையும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தையும் ராயவேலூருக்கு ஸமீபித்த சித்தூரிலுள்ள பக்தமகாஜனங்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஷிசித்தூரிலேயேசெய்வதாகச்சங்கல்பித்து நாளதுப்ரஜாபதிஹூ ஆடிமீ 13உ செவ்வாயன்று சாயங்காலம் 6 மணிசுமாருக்கு அந்நகரவாசிகளும் பலகிராமந்தரங்களிலிருந்து வந்தவர்களுமான மகாஜனங்களால் பூர்ணகும்பாதிகளோடும் பழவர்க்கங்கள் நிறைந்த தழுக்குகளோடும் வேதபாராயணம் கோஷ்டியுடன் மேளவாத்தி

யம் முழங்க பாலசந்திரனைப்போல் விளங்கும் கியாஸ் லைட்டுகள் பிரகாசிக்க பூர்ணவிமரிசையுடன் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு கர்னாடக சிபிகையில் ஆரோகணம்செய்து வீதிவலமாக வந்து அதற்காகவென்றலங்கரிக்கப்பட்ட கோடாவாரி ஸத்திரத்தில்விஜயம் செய்தார்கள். ஸ்ரீமஹாஸ்வாமிகள் ஸிம்மாஸனத்தில் அமர்ந்ததும் ஜயவிஜயீபவ என்ற கோஷம் ஆகாயமளாவிநின்றது. பிறகு அந்நகரவாசிகளானபக்தஜனங்களால்ஸ்வாகதபத்திரிகையொன்று ஸம்ஸ்கிருத பாஷையில் சுலோகரூபமாகப் படித்து ஸமர்ப்பிவிக்கப்பட்டது. அதைவேரிடத்தில் காண்க. அந்த வரவேற்புப் பத்திரிகையை ஸ்ரீமகாஸ்வாமிகள் அங்கீகரித்து அனுமோதித்து மகாஜனங்களுக்கு பதிலளிக்கும்படி கருங்குளம். சாஸ்திரதிலகம் வேதாந்தவிபூஷணம் பிர்மஸ்ரீ க-ச-கிருஷ்ண சாஸ்திரிகளை ஆக்ஞாபிக்க சாஸ்ரிகளவர்களும், இந்த சித்தூர் மகாநகரமானது பெரியவாளுடைய நல்வரவால் சித்புரமாகவே வாஸ்தவத்தில் ஆயிற்று. இது இந்நகரவாஸிகளின் பாக்கியமே. இதுபோலவேநாளையதினம் எல்லோரும் சிரத்தையோடு வியாஸ பூஜாமகோத்ஸவ கைங்கர்யத்தில் ஈடுபட்டு ஜன்மஸாபல்யத்தை சம்பாதித்துக்கொள்வீர்களாக என்று அறிய சிரியதோர் உபன்யாஸம் செய்தவுடன் பலமந்திராக்ஷதை பெற்றுக்கொண்டு எல்லோரும் வாஸஸ்தலம் சென்றார்கள். மறுநாள்புதன்கிழமையன்று காலையில் பெரியவாளுடையநித்யானுஷ்டானம்வபனம்ஸ்னானம்முடிந்தவுடன் நீவாநதிக்கரையில்ஷேசித்தூரிலும் மற்றுமுள்ளபக்கத்துக்கிராமங்களிலிருந்துவந்த மகாஜனங்களும் பூர்ணகும்பத்தோடு வியாஸபூஜைக்காகப்பிரார்த்தித்து நீவாநதிக்கரையில் அமர்ந்தசிவாலயத்தில் வாழைதோரணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட மகாமண்டபத்தில் அழைத்துவந்தார்கள். மகாஸ்வாமிகளவர்கள் மற்றுமுள்ள இரண்டுஸன்யாசிகளோடு வியாஸபூசையை வ்யஷ்டி ஸமஷ்டிஆராதனங்களால் விதிப்படி செய்துமுடித்தார்கள் ஸமஷ்டிபூஜை தீபாராதனைக்குப்பிறகு மகாஜனங்கள் மத்தியில் சாதுர்மாஸ்யஸங்கல்பம்செய்யப்பட்டது. பக்தஜனங்களால் அதுபரமபாக்யமென்றுஆனந்தமாய் அங்கீகரிக்கப்பட்டது.சேரசோழபாண்டியநாடுகளிலிருந்துதிருப்பதிமதராஸ் முதலானவிடங்களிலிருந்தும்வந்திருந்தபண்டிதர்கள்மூலமாய் வேதாந்தவாக்யார்த்த விசாரணையும் செய்யத் துவக்கப்பட்டது. அந்த ஸமயத்தில் அந்தவைபவங்களையெல்லாம் கண்ணாரக்கண்டுஆனந்த

பரஷ்பம் பெருகி.பசிதாகங்களையும் மறந்து,பிரம்மஸதஸ்ஸில் தேவர்கள் போல் பேரானந்தங்கொண்டு, ஆத்மஞானத்தையே அனுபவிப்பவர்போல் அசையாமலிருந்த மகாஜனங்களைக் காண்பது பெரிய காக்ஷியாயிருந்தது. ஷை சித்தூரென்பது பெரியதோர் நகரமாகும்.

ஸ்ரீஸுப்ரமணியக்கடவுளின் மாமனுரான நம்பிராஜன் என்ற வேடராஜனது பட்டணமே இப்பொழுது சித்தூரென வழக்கப்படுகிறது. ஓரிடத்திலிருந்து புறப்பட்டு சுற்றிச்சுற்றிவந்தும் அங்கேயேவந்து சேர்ந்தாராம் ஒரு பக்தர். அதனுல் சித்தூரென்ற பெயர் பொருள்வாய்ந்ததே. பண்டிதர்கள் உபன்னியஸிக்கையில் சித்--ஊர்--சித்தூர் அதாவது சித்புரம் என்று வர்ணித்துக் கூறினர். பரமாசார்யாளுடைய ஸான்னித்தியம் பெற்றதால் சைதன்ய வடிவமாயமைய பாக்கியம் பெற்ற அவ்வூருக்கு அப்பெயரே சாலவும் சிறந்தது. வள்ளிமலை என்ற ஒரு குன்றும அதன் பக்கத்தில் அமைந்துள்ளது. அங்கு ஓர் நதி பிரவகிக்கிறது. பக்கத்திலுள்ள ஒரு சிவ க்ஷேத்திரத்தில் ஒரு அர்ச்சகர் சிவாபிஷேகத்திற்காகத் தீர்த்தம் கொண்டுவருவதற்கு நதிக்குச் செல்லும்பொழுது நடுவில் ஓர் அரக்கன் பயமுறுத்தவே பகவான் கருணைகூர்ந்து நீ-வா என்று நதியை அழைத்தாராம், அதனுல் அந்நதி நீவா என்ற பெயருடன் ஆலயத்தின் பக்கத்தில் பெறுகிறது. இன்றுமப்படியே காணப்படுகிறது. அவ்வர்ச்சகர் ஸந்தோஷங்கொண்டு பயமில்லாமல் தீர்த்தமெடுத்துவந்து பகவானுக்கு அபிஷேகத்தைச்செய்தார் என்று அக்கிரமத்துப் பெரியோர்கள் சொல்லுகின்றனர். அவ்வூர் வாஸிகளும் மற்றவர்களும் அங்கேயே மிகப்பெயர்பெற்ற கட்டிமாங்கனிகள் புஷ்பங்கள் மற்ற பூஜாதிவியங்கள் இவைகளைத் தட்டிலேந்திக்கொண்டு ஸன்னிதானத்துக்கு வருகின்ற ராமணீயத்தைப் பார்க்கும்போது

पत्रं पुष्पं फलं तोयं योमे भक्त्याप्रयच्छति ।

என்ற கீதாவாக்யம் பயன்படச்செய்ய பகவானே அவதரித்தனரோ என எல்லோர் மனதிலும் தோன்றிற்று. ஷை சித்தூர் வாஸிகளான மகா-ா-ா-ஸ்ரீ வெங்கட்டரமணய்யர் முதலான பக்தி

ஜனங்கள் ஷ்டி கைங்கர்யத்துக்கு முன்னமே ஜாக்கிரதையாய் இருந்துவருகின்றனர். மகாஸ்வாமிகள் மற்ற இரண்டு யதிகளுடன் வியாஸபூஜையை முடித்து இவ்வாறு ஸகல ஜனங்களுக்கும் காக்ஷியளித்து பிரஸாதமுமளித்தனர். ஷ்டி சிஷ்யமஹா ஜனங்கள் வியாஸப்ரசாதம் குங்குமாக்ஷதப்ரசாதம் இவைகளைப் பெற்றுக்கொண்டு ஆசார்யாளின் சரணகமலத்தில் ஸாஷ்டாங்கமாய் பணிந்து நிர்மலமனதுடன் ஸந்தோஷித்தனர். அதை பார்க்கும்போது கிருதயுகமே அவ்வூரில் எப்போதும் நிகழ்ந்து வருகிறதென்று தோன்றிற்று. மறுநாள்முதல் காலை மாலைகளில் வந்த வித்வான்களைக்கொண்டு வேதாந்த வாக்கியார்த்தங்களும் உபந்யாஸங்களும் நடைபெற்று வருகின்றன. மகாஜனங்களின் பிரார்த்தனைக்கிணங்கி அவர்கள் மனதில் ஆழ்ந்துபடியும்படி ஸ்ரீமகாஸ்வாமிகளே தெளிவாய் உபதேசித்து வருகின்றார்கள். இது அந்நகரவாஸிகளின் பெரும்பாக்கியமே. இவ்வாறு ஸ்ரீமகாஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப்பப்படி இரண்டு மாதங்களிலும் அதே இடத்தில் பிரஸன்னமாயிருந்து ஸ்வாமி பூஜா பிரணஸந்தர்ப்பணாதிகளையும் விசேஷித்து வேதாந்த காலக்ஷேப உபன்யாஸாதிகளையும்செய்து வருவதால் ஆஸ்திகர்கள் யாவரும் அங்குவந்து தெரிசனம்செய்து ஷ்டி கைங்கர்யங்கள் நன்றாக நடக்கும்படி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுத்து கிருதார்த்தர்கள் ஆவதற்குத் தக்கதோர் ஸந்தர்ப்பம் இதுவே என்ற விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டு உபஸம்ஹரிக்கிறேன்.

V. சுந்தரேச்வரன்.

श्रीगुरुभ्यो नमः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्येत्यादि

विरुदावळीविराजमानानां श्रीमदखिलभूमण्डलमण्डनायमान

श्रीकांचीकामकोटिपीठाधिपानां जगद्गुरु

# श्रीशङ्कराचार्यस्वामिनां स्वागतपत्रिका ॥

येनेदं महसा विभाति भुवनं यस्माच्च जातं जगत्
यस्मिन्नेव विलीयते स भगवान् कैलासवासी विभुः ।
संसाराब्धिनिमग्नजन्तुनिवहानुद्धर्तुमार्यापतिः
श्रीमानद्य समागतश्शिवशिवेत्याहूयमाने मुहुः ॥ ॥१॥

योगाभ्यासवशेन शुद्धमनसा ध्यायंति यं योगिनः
सोऽयं सद्गुरुचन्द्रशेखरपरब्रह्माभिधानः प्रभुः ।
पार्श्वस्थामपि शङ्कराद्रितनयां ग्राहाद्गजेन्द्रं हरिः
लक्ष्मीमब्धिसुतां विनेव सहसा नः पातु मद्यागतः ॥ ॥२॥

चिदानन्दमयी मूर्तिर्यस्यासौ परमेश्वरः ।
मानुषीं मूर्तिमद्यैव दधानः स्वयमागतः ॥ ॥३॥

ईश्वरस्सर्वभूतानां यति रूपेण भासते ।
प्रतीक्षतां मुमुक्षूणामज्ञानतिमिरान्तकः ॥ ॥४॥

किं कृतं पुण्यमस्माभिः द्रष्टुं तं स्थूलचक्षुषा ।
तपतामपि दुस्साध्यं साक्षात्कर्तुमिहागतम् ॥ ॥५॥

योगिनामपि दुर्ज्ञेयं भक्तिगम्यं सुरेश्वरम् ।
भक्तार्तिभंजनं देवं पश्यामोऽद्य महीतले ॥ ॥६॥

जन्मान्तरसहस्रेषु किमस्माभिः कृतं तपः ।
निर्गुणस्सगुणो भूत्वा नस्सर्वान्पालयत्यसौ ॥ ॥७॥

बोधने गुरुरूपेण पालने पितृवत्प्रभुः ।
शिक्षणे राजवद्भाति यतींद्रः परमो गुरुः ॥ ॥८॥

पौराइव पुरीह्येषा कां पूजां कृतवत्यसौ ।
पुण्यभूमिरिति ख्याता पदसन्दर्शनाद्गुरोः ॥ ॥९॥

अज्ञानगाढान्धतमो वृतानां मार्गं श्रुतीनामविजानतां नः ।
श्रुत्यर्थयुक्तं वचनं विबोध्य पातीह लोकान् स हि संयमीन्द्रः ॥१०॥

ज्ञानस्ययोनित्वमवेक्ष्य यं वै लोकास्समस्ताः प्रणमन्तिनित्यम् ।
तं संयमीन्द्रं परमेश्वराभं याचामहे तत्परमात्मतत्वम् ॥ ॥११॥

तुरीयमाश्रमं स्वामिन् अतीतोपिमहीतले ।
बोधनार्थं तुरीयोसावाश्रमःस्वीकृतस्त्वया ॥ ॥१२॥

यो वै शङ्करपादपद्ममलं हृत्पद्ममध्यं गतं
कृत्वा संततमादरेण महता ध्यायंति सर्वार्थदम् ।
तेषां लोचनगोचरस्स भगवान् सर्वानभीष्टान्मुदा
दत्वा रक्षति शंकरः प्रियतमान् शिष्यानशेषान्भुवि ॥ ॥१३॥

स्वागतं ते महाभाग चन्द्रशेखर सद्गुरो ।
प्रणतान्नः पाहि पदे कमलादपि कोमले ॥ ॥११॥

इयं स्वागतपत्रिका चित्पुरवासिभिर्भक्तजनैः
गुरुचरणारविन्दयोस्समर्पिता ॥

# ஓர் கண்டனக்கூட்டம்.

9—8—30 மாலை 4 மணிக்கு சென்னை தம்பு செட்டிவீதி ஸ்ரீ சங்கரமடத்தில் ஸாஹித்ய வாங்முகபூஷணம் ஸ்ரீ வத்ஸ வே. ஸோமதேவ சர்மா அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பெருங் கூட்டம் கூடியது. பற்பல பண்டிதர்களும் லௌகிகர்களும் பெண்மக்களும் கூடியிருந்தனர். தலைவர் சாரதா சட்டத்தின் தீங்கையும், குறைந்தபக்ஷம் ராஜாபஹதூர் கிருஷ்ணமாசாரியார் திருத்தத்தை ஆதரிக்கவேண்டிய அவச்யத்தையும் மஹா ஜனங் களது உறக்கத்தையும் கும்பகோணம் பிராமணசபையின் ஊக் கத்தையும் பற்றி விரிவாய்ப் பேசி ஸ்ரீ மான் கிருஷ்ணமாச்சார் யாரின் திருத்தத்தை ஆமோதிக்கும் தீர்மானத்தை பிரேரித்துப் பேசும்படி பண்டிதர்களைவேண்டி பலர் பேசி தீர்மானம் அதிகாரி களுக்கனுப்பப்பட்டது.

ல. ராமசந்திரன்.

---

# புராண விமர்சம்

---

दैवमेवपरं मन्ये पौरुषन्तु निरर्थकम् ॥

தெய்வசக்தியே முக்கியம், புருடசக்தி உபயோகமில்லை என்ற இந்நீதி மொழியானது வெகு அநுபவஸாரமுள்ளதாகும் ஆனால் நவீநநாகரீக "பிருகஸ்பதிகள்" தெய்வசக்தியை மதியாமல் மனிதசக்தியை மகத்தாகவெண்ணி, கவர்மெண்டு சட்டத்தின் மூலமாய் தெய்வசக்தியை மாற்றியமைக்க பலகாரியங்களிலும் தலையிட்டுவிட்டார்கள். அவைகளில் ஒன்றாகிய நடந்துவந்த "சென்சச் சங்கியையில்" சதமானத்திற்கு கூடுதலாக ஜனத் தொகை தற்காலம் காணப்படுவதால் அதைக்குறைக்க (பிரஜா விருத்தியைத் தடுக்க சரியான சட்டம்ஒன்று செய்யவேண்டு மென்று முயற்சித்து வருகிறார்கள் இம்மாதிரி காரியங்கள் பரம அபத்தமென்பதில் சந்தேகமில்லை பிரஜாவிருத்தி விஷயமானது தெய்வசக்தியைப் பொருத்திருக்கிறது. ஏனெனில் ஒரு பிரஜை உண்டாவதற்கு பல்கோடிக்கணக்கான தனத்தை தர்மமார்க்கத் தில் தானம்செய்தும், பிரஜை உண்டாகாமல் போவதையும், பிரஜா விருத்தி இனி வேண்டாமென்று எவ்வளவு வேண்டிக்கொண் டாலும், மேன்மேலும் பிரஜைகள் உண்டாய்வருவதையும், தினப்

படியாய் அனுபவத்தால் பண்டித பாமரர்களும், நன்கறிந்த விஷயமே. பிரஜாவிருத்தியை தடைசெய்வதும், விருத்திசெய்வதும், எவ்வளவு புகழ்பெற்றவர்களுக்கும் அது சாத்தியமில்லாத காரியமாம். இம்மாதிரி விஷயங்களில் புத்திபிரமை கொண்டவர்களை நம் புராணச்சரித்திரங்கள் நற்புத்தி புகட்டிவருகின்றன.

अन्यथा चिन्तितं कार्यं दैवमन्यत्रचिन्तयेत् ॥

இவ்வசனத்தின் பொருளைச்சற்று விசாரிக்குமளவில் மனிதன் எண்ணின எண்ணம் ஒருக்காலும் பயன்படமாட்டாது. தெய்வ சங்கல்ப்பப்படியே நடைபெறும் என்கிறது. ஆனால் தெய்வ சங்கல்ப்பம் இன்னதென்று திவ்விய சக்திவாய்ந்த தேவர்களும், அறிந்தவர்களில்லை என்பது திண்ணம். அவ்விதமிருக்க அன்ன சக்திபெற்ற மனிதர்கள் எவ்விதமறிவார்கள்? அறிய சக்தியில்லாத காரணத்தால்தான் முயற்சித்த காரியம் விபரீதமாக முடியவும், அதனால் அவதிப்பட்டு விழிக்கவும்செய்கிறார்கள்.

1. உதாரணமாக:—மகாவிஷ்ணு ஒருக்கால் மகாசுரனுடன் யுத்தம்செய்து, அதனாலுண்டான வெகுகாலசிரமத்தை தீர்த்துக் கொள்வதற்காக ஓர் ஏகாந்தஸ்தலத்தில், பத்மாசனத்திலமர்ந்து ஞாண்பூட்டின தனுசைபூமியில் ஓர் முனையைநாட்டிக்கொண்டும், மற்றொருமுனையைத் தனது கழுத்தால் வைத்துக்கொண்டும் அயர்ந்து நித்திரை செய்தார். அக்காலத்தில் தேவர்கள் ஓர் யாகம்செய்யக்கருதி மகாவிஷ்ணுவை அழைக்க வைகுண்டம் சென்றார்கள். அவ்விடத்தில் விஷ்ணுவைக் காணமல் ஞான திருஷ்டியால் பார்த்தபோது ஏகாந்த ஸ்தலத்தில் இம்மாதிரி நித்ரைசெய்வதாக அறிந்து அவ்விடம்சென்று அவரை எழுப்ப பல உபாயங்களையும் செய்தார்கள், அதனாலவர் எழுந்திருக்க வில்லை. அப்போது பிருமாவானவர் 'கறையான்' என்ற ஓர் ஜந்துவை சிருஷ்டித்து அதனுதவியால் பூமியில் நாட்டியிருக்கும் தனுசின் ஓர் பாகத்தைத் தின்றுவிடும்படி ஏவினாலப்போதுதனுசு நிமிர்ந்துவிடும், அதனால் பகவான் எழுந்துவிடுவாரென்று தீர்மானித்து கறையானை ஏவினார். அவைகள் இக்காரியத்தில் சிறிது யோஜித்து நிற்கவே அப்போது பிருமாவானவர் "ஹவிர்த்தானமென்ற" யாகஸ்தலத்திற்கு வெளியில் சிந்திப்போகிற ஹவிசை உங்களுக்கு யாகத்தில் ஓர் ஹவிர்பாகமாகத் தருகிறோம். என்று சொன்னபிறகு ஒருவாறு சம்மதித்து அவ்விதமே தனுசின்

பூமிபாகத்தைத்தின்றன. அதனால் ஞாண்திடீரெனத் தெறித்து தனுசு நிமிர்ந்தது. அதன் வேகத்தால் விஷ்ணுவின் சிரசு துண்டிக்கப்பட்டன. அதைக்கண்ட தேவர்கள், மிகவருத்தமுற்று விஷ்ணுவை எழுப்ப முயற்சித்தது பரமாபத்தாய் முடிந்துவிட்டதே, இனிநாம் எவ்விதம் ஜீவிப்போமென்று மனங்கலங்கி துக்கிக்கிறபோது பிருஹஸ்பதி பகவான் "சத்திரூபிணியான அம்பிகையை வேண்டிக்கொண்டால் குணம் பெறலாம் என்றார். அவ்விதமே தேவர்கள் அம்பிகையைத் துதிசெய்ய அப்போது குதிரையின் முகத்தை விஷ்ணுவின் சரீரத்தில் சேர்த்துவைபுங்களென்று அம்பிகையின் உத்தரவு உண்டாயிற்று. அவ்விதமே 'துவஷ்டா' என்பவர் குதிரையின் முகத்தை விஷ்ணுவின் சரீரத்தில் சேர்த்துவைத்து பராசக்தியின் கிருபையால் திவ்வியமூர்த்தியாய் ஹியக்ரீவர் என்ற திருநாமத்தோடு விஷ்ணுவானவர் பிரகாசித்தார். உலகம் க்ஷேமம் பெற்றது தேவர்கள் சந்தோஷித்தார்கள். இதனால் தைவ சங்கல்பத்தை தேவர்களும் அறிந்தார்களில்லை என்பது விளங்கிற்று.

(தொடரும்)

எஸ். சங்கரராம சர்மா,

---

# வாரவிருத்தாந்தம்.

எழுந்திருங்கள்!! சாரதாசட்டத்திற்கு உயிரளிக்கப் பலவிடங்களில் பற்பலமுயற்சிகள் நடக்கின்றன. அதன் பூர்ண உக்ரகளையைக் காட்டாமல் ஆரம்பத்தில் ஸ்வல்ப்ப ரூபாய் தண்டனையுடன் விடப்படுகிறது. இது மெதுவாக ஸ்திரமாய்விட்டால் க்ரமமாக ஜெயில் சிக்ஷையும் ஆரம்பிப்பர். ஹைதராபாத்தில் 3-கேஸில் 20-ரூ பெற்றோருக்கும் மாப்பிள்ளைக்கும் உபாத்தியாயருக்கு 10-ரூ சிக்ஷை விதிக்கப்பட்டது. ஜாக்ரதை எழுங்கள் கூட்டங்கூடுங்கள்! கண்டியுங்கள்!! அரசாங்கத்திற்கறிவியுங்கள்!!!

அழுதபிள்ளையேபால்குடிக்கும்! பாம்பே அரசாங்கம் முஸ்லீம் தர்மசொத்து பரிபாலன சட்டமொன்றை இயற்றியது. அதில் "தாவூதிபோரா" என்ற ஒரு வகுப்பை விலக்கவேண்டுமென்பது அவர்கோறிக்கை. அதை அரசாங்கம் பூர்த்திசெய்யாததால் அச் சமுஹத்தினர் 2000-பேர் கூடி கறுப்புக்கொடியுடன் ஊர்வலம்

சென்று கூட்டம் போட்டனர் இங்ஙனம் யாதாமொரு வேலை செய்து நம்குறையைக் கவனிக்கும்படி செய்தாலன்றி நமக்கு கதி மோக்ஷமில்லை.

எல்லையில்லையா? காந்தி கூட்டத்தாரது செயல் நாளுக்கு நாள் மதத்தை அழிக்கத் தீவ்ரமாக விருத்தியாகிறது. பாம்பே காங்கிரஸ்கமிட்டி ஓர் புதியவழியில் விஷமவேலைசெய்ய ஆரம்பிக்கிறது. தீண்டாதாரைவிடாத கோவிலில் எவரும் நுழையக் கூடாதென சத்யாக்ரஹம் செய்யப்போகின்றனர். "சூடுசூட்டால் கழியும்" என்பதுபோல் காங்க்ரஸில் எவரும் சோலாகாதுளன ஏன் இன்னும் சத்யாக்ரஹம் ஆரம்பிக்கவில்லையென ஆஸ்திகரை கேழ்க்கின்றது இத்தீயச்செயல் என்ன பதிலளிக்கப்போகிறீர் என நாமும் கேட்கிறோம்.

சிறையும் 200ரூபாயும்! சாரதா சட்டப்படி 29உ கல்கத்தாவில் சாஸ்திரப்படி பால்யவிவாஹம் செய்வதற்காக 5-நாள் சிறையும் 200 ரூபாய் அபாரதமும் விதிக்கப்பட்டது. நாகரீகமுள்ளவர் இக்குற்றத்தை ஸஹிக்கமுடியாதென நீதிபதி கூறுகிறார். கொஞ்சம் கொஞ்சமாக கொழுந்துவிட்டு எரிகிறது சாரதாசட்டத் தீ. அது தர்மத்தை அழிக்காதபடி அதை அவிக்க முன் வாருங்கள்! இல்லையேல் பெண்மக்களுடன் சிறைவாஸம்செய்ய நேரும்.

விஷ்ணு ஆலயத்தில் கிருஸ்துவர்:—சிவகங்கை விஷ்ணு கோவிலுக்கு ஓர் கிருஸ்துவரை தர்மகர்த்தாவாயிருக்கும்படி தேவஸ்தானநிதிகளை ரக்ஷிக்க அவதரித்த கூட்டம் நியமித்திருக்கிறது. நாம் உறங்கினல் என்னதான் செய்யமாட்டார். அத்திருக்கூட்டத்தில் இதைப்பற்றி விவாதம் நடந்ததாம். பலர் ஸாதகமாயிருந்ததால் தலைவர் இச்சியமனத்தை ஏற்றனராம். இனி இதன்மூலம் வரப்போகும் துன்பம் சொல்லத்தக்கதல்ல, சிவகங்கை வாஸிகளோ மற்றவர்களோ இதை ஆக்ஷேபித்துபோர் புரிந்தால் நன்மையுண்டு.

போகத்திற்கல்ல மதம்:-பாம்பேயில் ஓர் மஹம்மதியப்பெண் ஹிந்துவினிடம் காதல்கொண்டு சட்டப்படி விவாஹமானதாகக் காட்ட ஹிந்து மதத்தில் சேர்ந்து புதிய நாமகரணம் செய்து

கொண்டாள். இப்படி மதத்தை மாற்றுவதென்பது ஆர்யபிரும ஸங்கதசுத்தி ஸபைகளது திருவிளையாடல்; இம்மாறுதல் எள்ளளவேனும் தைவபக்தி மதபக்தியுள்ளதா? கேவல மிருகசுகத்திற்காகவா மதம் என ஷடி ஸபைகள் சிந்தித்துப்பார்க்கட்டும்.

உணர்ச்சி இல்லை:—கோவில் அதிகாரிகள் போர்டுக்கு வரி கொடாவிடில் கோவில்சொத்தை ஜப்திசெய்ய ஸமீபத்தில் ஓர் தீர்மானம சென்னை சட்டசபையில் நிறைவேறியது அதுபோது ஸ்ரீமான் ஸி. ஆர், பார்த்தஸாரதி அய்யங்கார் என்ற அங்கத்தினர் கிருஸ்துவ மஹம்மதிய மதத்திற்காக அரசாங்கம் செலவு செய்வதைக்காட்டி இந்துக்கள் அவர்களைப்போல் மத உணர்ச்சி இல்லாமலிருப்பதால் இங்ஙனம் கோவில்பொருளைக் கைக்கொள்வது அடாதகாரியமென்றூர். இவரேனும் மதாபிமானங்கொண்டு இப்படி துணிந்து பேசியதை மெச்சுகிறோம். ஆயினும் ஏனைய இந்திய அங்கத்தினரும் மற்ற இந்தியரும் தன்னிலையைக்கண்டு வெட்கிக்காமல்கூட இருப்பதற்கு வருந்துகிறோம்.

நிஷ்காம்யமா? ஷடி விவாதத்தில் ஸர் பாத்ரோ என்ற மந்திரி பதவியையிழந்தவர் இந்தியர் நிஷ்காம்ய கர்மாவைச் செய்யாததால் மதஸ்தாபனம் கெட்டுவிட்டதென வருந்துகிறூர். இவரும் இந்துவே. இவர் மந்திரிபதவி வஹித்தபோது நிஷ்காம்யமாக ஏதேனும் செய்தாரோ? அல்லது தன் கோஷ்டியும் தானும் சிறப்புற காம்யமாகச்செய்தாரோ? இத்திருக்கூட்டத்தார் திருவிளையாடலே இந்த. போர்ட் பேசுவதெல்லோர்க்கும் எளிது.

வியாஸபூஜையில் தேக்கச்சேரி:—குற்றாலம் மௌனஸ்வாமிகள் தென்னாட்டிற்கு புதிதல்ல. குண்டூரில் இவ்வாண்டு அன்னார் வ்யாஸபூஜை நடந்தது. அன்று மாலை கலெக்டருக்கும் ஸப் கலெக்டருக்கும் ஓர்தேக்கச்சேரி நடத்தப்பட்டதாம். இன்னூதனநாகரீகமுறை ஸ்ரீஸ்வாமிகளது அங்கீகாரத்தைப் பெற்றிருக்காதென்றே எண்ணுகிறோம். சிஷ்யகோடிகள் கலெக்டர் செய்த ஏதாவது ஓர் லௌகிக உபகாரத்திற்கு பதிலாக இதைச் செய்திருக்கவேண்டும். உலகப்பற்றைவிட்டு ஆத்யாத்ம விஷயத்தில் ஈடுபட்ட ஸ்ரீஸ்வாமிகளது சிஷ்யர்கள் இங்ஙனம் லௌகிகத்தில் அன்யநாட்டு அநாசாரத்தை நிறுத்தி பரிசுத்தமான பகவத் பிரஸாதத்தைஇந்தியரான கலெக்டர்களும் அறியும்படி ஸ்வாமி

கள் செய்திருக்கலாம். ஆனல் அவாள் மௌனஸ்வாமிகளாத லின் இதிலும் மௌனமாயிருந்தார்போலும்.

சட்டசபைக்கு சாஸ்த்திரக்ஞானம்! ஹைதராபாத் சட்ட சபையில் விதவா விவாஹ விஷயமாக சட்டம் செய்ய ஓர் சர்ச்சை உண்டாகி ஸம்ப்ரதாயப்படி தனிக்கமிட்டிக்கு அநுப்பப் பட்டது. ஷிசபை அங்கத்தினரைக் கொண்டதே தனிக்கமிட்டி அதன் தீர்மானத்தில்,' விதவாவிவாஹம் சாஸ்திரத்திற்கு விரோதமானதில்லை மதத்திற்கு முறண்பட்டதில்லை'' என்று தீர்மானித்தது. இதைக்கண்டு ஆச்சர்யப்படுவதிற்கில்லை.பல் ஆண்டு பயிற்சி பெற்று கற்கத்தக்க சாஸ்த்ரக்ஞானம் இவர்களுக்கு சட்டசபைக்குப்போனவுடன் திடீரென வந்ததற்கே ஆச்சரியப்படுகிறேம் சாஸ்திரமென்ன தங்களுக்கு கோசாமாகாத விஷயமேயில்லை என்பது அவர் துணிபு. இவர்கள் பண்டிதர்களை அழைத்து விசாரித்தல்வேண்டும் என்று அறியாததற்கே வருந்துகிறேம்.

கூற்றினும் பாவலர் கோடியவராவரோ:—பண்டிதர்களை நிந்தாஸ்துதியாய்க்கூறும் தமிழ் பாட்டின் ஸாரமிது. தங்களது வாக்ய சாதுர்யத்தால் எப்படிவேண்டுமானுலும் செய்வதால் எமனைவிட கொடியவர் எனக்கூறி அவர்குணத்தை கொண்டாடுகிறர்கள். இதற்கேற்க பாண்டித்யத்துடன் வாக்சாதுர்யமுங் கலந்தால் நினைத்தபடி உலகைத் திருப்பலாம். ஆனல் தைவத்திற்கஞ்சி மதாபிமானங்கொண்டோர் உண்மை சாஸ்திரார்த்தத்தை எவரும் விபரீதமாகக் கொள்ளாமலிருக்கும்படியே பேசுவர். வேதவைதிக நிந்தை நிறைந்த இக்காலத்தில் "வேதத்தைவிடப்ரபந்தத்தின் ஏற்றம்'' என்ற விஷயத்தை உபன்யஸிப்பதாக தேசிய பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறர் ஓர் பண்டிதர். உண்மையாகவே அப்படி அவாள் கருதினுலுங்கூட லோகக்ஷேமத்தையும் தற்கால நிலையுங்கருதி திவ்யப்ரபந்தத்தின் பெருமையை மாத்ரம் கூறலாம். "நஹிநிந்தா'' நியாயத்தை நாமறியாமலில்லை. உபந்யாஸகர்கள் எங்ஙனம் உபன்யஸிக்கவேண்டுமென நமது பரமாசார்யாள் ஸ்ரீ பொம்பத்தூரில் செய்த உபன்யாஸத்தை எல்லாபண்டிதர்களும் கேட்டிருக்கவேண்டும் என்பதெனதாசை.

வே. ஸோமதேவ சர்மா.